# அரையாண்டு பொதுத் தேர்வு - 2019

## பன்னிரெண்டாம் வகுப்பு

பதிவு எண் : | | | | | | |

## கணக்குப்பதிவியல்

நேரம்: 3.00 மணி   மதிப்பெண்கள்: 90

அறிவுரை :
1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப் பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.
2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்குப் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

### பகுதி - I

20 x 1 = 20

குறிப்பு : i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
ii) கொடுக்கப்பட்ட நான்கு மாற்று விடைகளில் மிகவும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. உரிமையாளரின் சொத்துக்கள் ரூ.85,000 மற்றும் பொறுப்புகள் ரூ.21,000 எனில் அவருடைய முதல் தொகை
   a) ரூ.85,000 b) ரூ.1,06,000 c) ரூ.21,000 d) ரூ.64,000
2. பொருந்திய ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்:
   a) மொத்த விற்பனை = ரொக்க விற்பனை + கடன் விற்பனை
   b) மொத்த விற்பனை = ரொக்க விற்பனை – கடன் விற்பனை
   c) மொத்த விற்பனை = கடன் விற்பனை – ரொக்க விற்பனை
   d) மொத்த விற்பனை = கடன் விற்பனை + ரொக்கக் கொள்முதல்
3. பின்வருவனவற்றில் எது வருவாய் மற்றும் செலவினக் கணக்கில் பதியப்படுவதில்லை?
   a) பழைய செய்தித்தாள்கள் விற்றது b) சொத்து விற்பனை மீதான நட்டம்
   c) செயலாளருக்கு வழங்கிய மதிப்பூதியம் d) அறைகலன் விற்ற தொகை
4. நடப்பாண்டில் பெற வேண்டிய சந்தா இன்னும் பெறாதது a) ஒரு சொத்து
   b) ஒரு பொறுப்பு c) ஒரு செலவு d) தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று
5. ஒரு கூட்டாளி ஒவ்வொரு மாத நடுவிலும் ஒருகுறிப்பிட்ட தொகையை வழக்கமாக எடுத்துக் கொள்ளும் போது, அந்த எடுப்புகள் மீது கணக்கிடப்படும் வட்டிக்குரிய மாதங்கள் சராசரியாக
   a) 5.5 மாதங்கள் b) 6 மாதங்கள் c) 12 மாதங்கள் d) 6.5 மாதங்கள்
6. நடப்புக் கணக்கின் இறுதி இருப்பு, ஒரு கூட்டாளிக்கு ________ ஆக இருக்கலாம்.
   a) பற்றிருப்பு அல்லது வரவிருப்பு b) பற்றிருப்பு மட்டும்
   c) வரவிருப்பு மட்டும் d) இருப்பு இன்மை
7. கூட்டு சராசரி இலாப முறையில், நற்பெயர் = ________.
   a) நற்பெயர் = கூட்டு சராசரி இலாபம் X கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை
   b) நற்பெயர் = சராசரி இலாபம் X கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை
   c) நற்பெயர் = உயர் இலாபம் X கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை
   d) நற்பெயர் = உயர் இலாபம் X ஆண்டுத்தொகை காரணிகளின் தற்போதைய மதிப்பு
8. மறுமதிப்பீட்டுக் கணக்கு ஒரு
   a) சொத்து க/கு b) பெயரளவு க/கு c) ஆள்சார் க/கு d) ஆள்சாரா க/கு
9. ஜேம்ஸ் மற்றும் கமல் இலாப நட்டங்களை 5:3 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றனர். அவர்கள் சுனில் என்பவரை $^{1}/_{5}$ இலாபப் பங்கிற்கு கூட்டாளியாக சேர்த்துக் கொண்டனர். தியாக விகிதத்தைக் கணக்கிடவும்.
   a) 1 : 3 b) 3 : 1 c) 5 : 3 d) 3 : 5
10. புதிய கூட்டாளியைச் சேர்க்கும் போது, பகிர்ந்து தரா காப்புகள், இலாபங்கள் அல்லது நட்டங்கள், பழைய கூட்டாளிகளுக்கு ________ இல் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். a) புதிய இலாப விகிதம்
    b) பழைய இலாப விகிதம் c) தியாக விகிதம் d) ஆதாய விகிதம்

11. ஒரு கூட்டாளி விலகலின் போது, ஆதாய விகிதத்தின் நிர்ணயம் எதற்கு தேவைப்படுகிறது?
 a) மறுமதிப்பீட்டு இலாபம் அல்லது நட்டம் மாற்றப்படுவதற்கு
 b) பகிர்ந்து தரா இலாபங்கள் மற்றும் நட்டங்களை பகிரிந்தளிப்பதற்கு
 c) நற்பெயரை சரிக்கட்டுவதற்கு
 d) பகிர்ந்துதரா காப்புகளை பகிர்ந்தளிப்பதற்கு

12. X, Y மற்றும் Z என்ற கூட்டாளிகள் இலாப நட்டங்களை சமமாக பகிர்ந்து வந்தனர். 2019 ஏப்ரல் 1 அன்று X இறந்து விட்டார். 2018-ல் இலாபம் ரூ.36,000 என்ற அடிப்படையில் 2019-ம் ஆண்டுக்குரிய இலாபத்தில் X-ன் பங்கினைக் கண்டறியவும்.
 a) ரூ.1,000 b) ரூ.3,000 c) ரூ.12,000 d) ரூ.36,000

13. ஒறுப்பிழப்பு செய்த பங்குகளை மறுவெளியீடு செய்த பிறகு, பங்கு ஒறுப்பிழப்புக் கணக்கின் இருப்பு மாற்றப்படுவது
 a) பொதுக்காப்புக் கணக்கிற்கு
 b) முதலினக் காப்பு கணக்கிற்கு
 c) பத்திர முனைமக் கணக்கிற்கு
 d) உபரி கணக்கிற்கு

14. சொத்துக்களை வாங்குவதற்காக பங்குகள் வெளியிடும் போது வரவு வைக்கப்படும் கணக்கு
 a) விற்பனையாளர் க/கு
 b) பற்பல சொத்துக்கள் க/கு
 c) பங்கு முதல் க/கு
 d) வங்கிக் க/கு

15. பொருத்துக:
தவணை முறையில் பங்கு முதலானது கீழ்க்கண்டவாறு பெறப்படலாம்.
 1) முதல் தவணை - i) முதல் அழைப்புத் தொகை
 2) இரண்டாம் தவணை - ii) விண்ணப்பத் தொகை
 3) மூன்றாம் தவணை - iii) ஒதுக்கீட்டுத் தொகை
 4) கடைசித் தவணை - iv) இறுதி அழைப்புத் தொகை
 a) (1)-(iii), (2)-(ii), (3)-(i), (4)-(iv)
 b) (1)-(i), (2)-(iv), (3)-(iii), (4)-(ii)
 c) (1)-(ii), (2)-(iii), (3)-(i), (4)-(iv)
 d) (1)-(ii), (2)-(iii), (3)-(iv), (4)-(i)

16. பின்வருவனவற்றில் எது நிதிநிலைப் பகுப்பாய்வின் ஒரு கருவி அல்ல?
 a) போக்குப் பகுப்பாய்வு
 b) பொது அளவு அறிக்கை
 c) ஒப்பீட்டு அறிக்கை
 d) நிர்ணயிக்கப்பட்ட அடக்கவிலையியல்

17. ஒரு பொது அளவு இருப்புநிலைக் குறிப்பில், நீண்ட காலச் சொத்துக்களின் சதவீதம் 75 எனில், நடப்புச் சொத்துக்களின் சதவீதம் எவ்வளவு?
 a) 175 b) 125 c) 25 d) 100

18. ஒரு இனம் மற்றொரு இனத்தோடு பெற்றிருக்கும் தொடர்பினை கணிதவியல் முறையில் கூறுவது
 a) முடிவு b) விகிதம் c) மாதிரி d) தீர்மானம்

19. பின்வருவனவற்றில் சரியாகப் பொருந்தாதது எது?
 a) நடப்புச் சொத்துக்கள் - சரக்கிருப்பு
 b) நடப்புப் பொறுப்புகள் - கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவை
 c) நீண்ட காலக் கடன் - செலவுகள் செலுத்த வேண்டியது
 d) பங்குதாரர் நிதி - நேர்மைப் பங்கு முதல்

20. Tally-ல் முன்பே வரையறுக்கப்பட்ட பேரேடு(கள்) ?
 i) ரொக்கம் ii) இலாப நட்டக் க/கு iii) முதல் க/கு
 a) (i) மட்டும்
 b) (ii) மட்டும்
 c) (i) மற்றும் (ii)
 d) (ii) மற்றும் (iii)

## பகுதி - II

எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி: *(வினா எண். 30 கட்டாய வினா)* 7 x 2 = 14

21. பின்வரும் விவரங்களிலிருந்து விடுபட்ட தகவலைக் காணவும்.

| விவரம் | ரூ. |
|---|---|
| 2018 ஏப்ரல் 1 அன்று முதல் | 40,000 |
| 2019 மார்ச் 31 அன்று முதல் | 50,000 |
| அவ்வாண்டில் கொண்டு வந்த கூடுதல் முதல் | 7,000 |
| அவ்வாண்டில் இலாபம் | 8,000 |
| அவ்வாண்டில் எடுப்புகள் | ? |

22. இலாப நோக்கற்ற அமைப்பில், சந்தா என்பது என்ன?
23. முரளி மற்றும் சேது இருவரும் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளிகள். முரளி, கழிவுக்கு முன் உள்ள நிகர இலாபத்தில் 10% கழிவாகப் பெற வேண்டும். சேது, கழிவுக்குப் பின் உள்ள நிகர இலாபத்தில் 10% கழிவாகப் பெற வேண்டும். 2019 மார்ச் 31-ம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய கழிவு கணக்கிடுவதற்கு முன்னர் உள்ள நிகர லாபம் ரூ.1,10,000. முரளி மற்றும் சேதுவிற்கு தர வேண்டிய கழிவினைக் கண்டுபிடிக்கவும்.
24. ஒரு நிறுவனத்தின் கடந்த ஐந்து ஆண்டுகளின் இலாபங்கள் பின்வருமாறு:
2014 : Rs.10,000 ; 2015 : Rs.11,000 ; 2016 : Rs.12,000 ; 2017 : Rs.13,000 மற்றும் 2018 : Rs.14,000
5 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 2 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.
25. கயல், மாலா மற்றும் நீலா என்ற கூட்டாளிகள் தங்கள் இலாபங்களை 2:2:1 என்ற விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். கயல் என்பவர் கூட்டாண்மையை விட்டு விலகுகிறார். மாலா மற்றும் நீலாவுக்கும் இடையே உள்ள புதிய இலாபப் பகிர்வு விகிதம் 3:2. ஆதாய விகிதத்தைக் கணக்கிடவும்.
26. முத்து வரையறு நிறுமம் பங்கு ஒன்று ரூ.10 வீதம் 50,000 பங்குகளை பின்வருமாறு செலுத்தும் வண்ணம் வெளியிட்டது.
விண்ணப்பத்தின் மீது ரூ.2, ஒதுக்கீட்டின் மீது ரூ.4, முதல் மற்றும் இறுதி அழைப்பின் மீது ரூ.4. 1,000 பங்குகள் வைத்துள்ள ஒருவர் அழைப்புத் தொகையை செலுத்தவில்லை. இதைத்தவிர, ஏனைய அனைத்துத் தொகைகளும் பெறப்பட்டன. அழைப்பு நிலுவைக் கணக்கினைப் பயன்படுத்தி, அழைப்புக்கான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.
27. நடைமுறை முதல் என்றால் என்ன?
28. கீழ்க்கண்ட தகவல்களிலிருந்து விரைவு விகிதத்தைக் கணக்கிடவும்: மொத்த நடப்புப் பொறுப்புகள் ரூ.2,40,000 ; மொத்த நடப்புச் சொத்துக்கள் ரூ.4,50,000 ; சரக்கிருப்பு ரூ.70,000 ; முன்கூட்டிச் செலுத்திய செலவுகள் ரூ.20,000
29. Tally.ERP 9 - ல் குழு என்றால் என்ன?
30. குறை ஒப்பம் என்றால் என்ன?

## பகுதி - III

எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி: *(வினா எண். 40 கட்டாய வினா)* 7 x 3 = 21

31. பின்வரும் விவரங்களிலிருந்து அவ்வாண்டின் மேற்கொண்ட மொத்த விற்பனையைக் கண்டறியவும்.

| விவரம் | ரூ. |
|---|---|
| 2018 ஜனவரி 1 அன்று கடனாளிகள் | 1,30,000 |
| அவ்வாண்டில் கடனாளிகளிடமிருந்து ரொக்கம் பெற்றது | 4,20,000 |
| விற்பனைத் திருப்பம் | 35,000 |
| வாராக்கடன் | 15,000 |
| 2018 டிசம்பர் 31 அன்று கடனாளிகள் | 2,00,000 |
| ரொக்க விற்பனை | 4,60,000 |

32. பின்வரும் விவரங்கள் மார்த்தாண்டம் பெண்கள் பண்பாட்டு மன்றத்தின் இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டவும்.

| | ரூ. |
|---|---|
| 1.4.2018 அன்று விளையாட்டுப் பொருள்கள் இருப்பு | 16,000 |
| அவ்வாண்டில் வாங்கிய விளையாட்டுப் பொருள்கள் | 84,000 |
| 31.3.2019 அன்று விளையாட்டுப் பொருள்கள் இருப்பு | 10,000 |

33. "வியாபார நிறுவனத்தின் சாதகமான அமைவிடம்" - கூட்டாண்மை நிறுவனத்தின் நற்பெயர் மதிப்பினைத் தீர்மானிக்கும் காரணியா? ஏன்?

34. விமல் மற்றும் ஆதி என்ற இரு கூட்டாளிகள் 2:1 என்ற விகிதத்தில் இலாப நட்டத்தைப் பகிர்ந்து வந்தனர். அவர்கள் ஜெயம் என்பவரை $^1/_4$ பங்குக்கு கூட்டாளியாகச் சேர்த்தனர். புதிய இலாபப் பகிர்வு விகிதம் மற்றும் தியாக விகிதம் கணக்கிடவும்.

35. பின்வரும் குறிப்பேட்டுப் பதிவுகளை நிறைவு செய்யவும். இறந்த கூட்டாளியின் தொகையைச் செலுத்துவதற்கான குறிப்பேட்டுப் பதிவுகள்:

a) சேர வேண்டிய தொகை உடனடியாக ரொக்கமாக செலுத்தப்படாத போது

| நாள் | விவரம் | பே.ப.எ. | பற்று ரூ. | வரவு ரூ. |
|---|---|---|---|---|
| | இறந்த கூட்டாளியின் நிறைவேற்றாளர் க/கு ப<br>________ | | XXX | <br>________ |

b) சேர வேண்டிய தொகையின் ஒரு பகுதி மட்டும் உடனடியாக செலுத்தப்படும் போது

| நாள் | விவரம் | பே.ப.எ. | பற்று ரூ. | வரவு ரூ. |
|---|---|---|---|---|
| | இறந்த கூட்டாளியின் நிறைவேற்றாளர் க/கு ப<br>________<br>________ | | XXX | <br>________<br>________ |

36. பின்வரும் விவரங்களைக் கொண்டு குறிஞ்சி வரையறு நிறுவனத்தின் போக்கு சதவீதங்களைக் கணக்கிடவும்.

| விவரம் | ரூ. ஆயிரங்களில் | | |
|---|---|---|---|
| | 2015 - 16 | 2016 - 17 | 2017 - 18 |
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 120 | 132 | 156 |
| இதர வருமானம் | 50 | 38 | 65 |
| செலவுகள் | 100 | 135 | 123 |

37. சானியா நிறுமத்தின் கொடுக்கப்பட்ட தகவல்களிலிருந்து சரக்கிருப்பு சுழற்சி விகிதத்தைக் கணக்கிடவும்

| விவரம் | ரூ. |
|---|---|
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 1,90,000 |
| அவ்வாண்டில் தொடக்கச் சரக்கிருப்பு | 40,000 |
| அவ்வாண்டில் இறுதிச் சரக்கிருப்பு | 20,000 |
| அவ்வாண்டில் மேற்கொண்ட கொள்முதல் | 90,000 |
| உள்தூக்குக் கூலி | 10,000 |

38. செயல்பாட்டின் அடிப்படையில் விகிதங்களை வகைப்படுத்துக.

39. கணக்கியல் அறிக்கைகள் என்றால் என்ன? அவற்றை வகைப்படுத்துக.

40. ஒவ்வொரு கூட்டாளிக்கும் இரண்டு கணக்குகள் பராமரிக்கப்படும் முதல் முறை எது? விளக்குக.

## பகுதி - IV

7 x 5 = 35

அனைத்து வினாக்களுக்கும் விடையளி:

41. a) நிலையறிக்கை மற்றும் இருப்புநிலைக் குறிப்புக்கும் இடையே உள்ள வேறுபாடுகளை எழுதுக.

*(அல்லது)*

b) ஒரு கூட்டாண்மை நிறுவனத்தில் சரண், அருண் மற்றும் கரண் என்ற கூட்டாளிகள் தங்கள் இலாபம் மற்றும் நட்டங்களை 4:3:3 என்ற விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். 2016 டிசம்பர் 31-ம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு:

| பொறுப்புகள் | ரூ. | ரூ. | சொத்துக்கள் | ரூ. | ரூ. |
|---|---|---|---|---|---|
| முதல் கணக்குகள்: | | | கட்டடம் | | 60,000 |
| சரண் | 60,000 | | இயந்திரம் | | 40,000 |
| அருண் | 50,000 | | முதலீடுகள் | | 20,000 |
| கரண் | 40,000 | 1,50,000 | சரக்கிருப்பு | | 12,000 |
| பொதுகாப்பு | | 15,000 | கடனாளிகள் | 25,000 | |
| கடனீந்தோர் | | 35,000 | கழிக்க : வாராக்கடன் ஒதுக்கு | 1,000 | 24,000 |
| | | | வங்கி ரொக்கம் | | 44,000 |
| | | 2,00,000 | | | 2,00,000 |

1.1.2017 அன்று கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு கரண் விலகினார்.

i) நிறுவனத்தின் நற்பெயர் ரூ.21,000 என மதிப்பிடப்பட்டது.
ii) கட்டடம் ரூ.80,000 ஆக மதிப்பிட வேண்டும்.
iii) இயந்திரம் மீது 10% மதிப்பேற்றம் செய்ய வேண்டும்.
iv) வாராக்கடன் ஒதுக்கு ரூ.2,000 ஆக அதிகரிக்க வேண்டும்.
v) சரக்கிருப்பு மதிப்பில் ரூ.2,000 குறைக்க வேண்டும்.
vi) கரணுக்கு செலுத்தவேண்டிய தொகை உடனடியாக செலுத்தப்படவில்லை.
viii) மறுமதிப்பீட்டு இலாபம் ரூ. 21,000

கூட்டாளிகளின் முதல் கணக்குகளைத் தயார் செய்யவும் மற்றும் விலகலுக்குப் பின் உள்ள கூட்டாண்மை நிறுவனத்தின் இருப்புநிலைக் குறிப்பையும் தயார் செய்யவும்.

42. a) மளிகை வியாபாரம் நடத்தி வரும் அர்ஜுன் தன்னுடைய கணக்கேடுகளை இரட்டைப் பதிவு முறையில் பராமரிப்பதில்லை. அவருடைய ஏடுகளிலிருந்து பெறப்பட்ட தகவல்கள் பின்வருமாறு:

| விவரம் | 1.4.2018 ரூ. | 31.3.2019 ரூ. |
|---|---|---|
| பொறி மற்றும் இயந்திரம் | 20,000 | 20,000 |
| சரக்கிருப்பு | 9,000 | 16,000 |
| பற்பல கடனாளிகள் | 2,000 | 5,300 |
| பற்பல கடனீந்தோர் | 5,000 | 4,000 |
| வங்கி ரொக்கம் | 4,000 | 6,000 |

31.3.2019 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டின் பிற தகவல்கள் பின்வருமாறு:

| | ரூ. |
|---|---|
| விளம்பரம் | 4,700 |
| உள்தூக்குக் கூலி | 8,000 |
| கடனீந்தோருக்கு அளித்த ரொக்கம் | 64,000 |
| எடுப்புகள் | 2,000 |

அவ்வாண்டின் மொத்த விற்பனை ரூ.85,000. அவ்வாண்டின் மொத்தக் கொள்முதல் ரூ.65,000. கொள்முதல் திருப்பம் ரூ.2,000 மற்றும் விற்பனைத் திருப்பம் ரூ.1,000. பொறி மற்றும் இயந்திரம் மீது 5% தேய்மானம் நீக்கவும். ரூ.300 ஐயக்கடன் ஒதுக்கு உருவாக்க வேண்டும். 2019 மார்ச் 31-ம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வியாபார இலாப நட்டக் கணக்கு மற்றும் அந்நாளைய இருப்புநிலைக் குறிப்பு தயாரிக்கவும்.

*(அல்லது)*

b) அருணன் நிறுமத்தின் 31.3.2019 ஆம் நாளைய பின்வரும் இருப்புநிலைக் குறிப்பிலிருந்து
i) புற அகப் பொறுப்புகள் விகிதம் ii) உரிமையாளர் விகிதம் மற்றும்
iii) முதல் உந்து திறன் விகிதம் கணக்கிடவும்.

அருணன் நிறுவனத்தின் 31.3.2019 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு

| விவரம் | ரூ |
|---|---|
| I. பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள் | |
| 1. பங்குதாரர் நிதி: | |
| a) பங்கு முதல் | |
| நேர்மைப் பங்கு முதல் | 1,50,000 |
| 8% முன்னுரிமைப் பங்கு முதல் | 2,00,000 |
| b) காப்புகள் மற்றும் மிகுதி | 1,50,000 |
| 2. நீண்டகாலப் பொறுப்புகள்: | |
| நீண்ட காலக் கடன்கள் (9% கடனீட்டுப் பத்திரங்கள்) | 4,00,000 |
| 3. நடப்புப் பொறுப்புகள்: | |
| a) வங்கியிலிருந்து பெற்ற குறுகிய காலக் கடன்கள் | 25,000 |
| b) கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகள் | 75,000 |
| மொத்தம் | 10,00,000 |
| II. சொத்துகள்: | |
| 1. நீண்டகாலச் சொத்துக்கள்: | |
| நிலைச் சொத்துக்கள் | 7,50,000 |
| 2. நடப்புச் சொத்துக்கள்: | |
| a) சரக்கிருப்பு | 1,20,000 |
| b) கணக்குகள் மூலம் பெற வேண்டியவைகள் | 1,00,000 |
| c) ரொக்கம் மற்றும் ரொக்கத்திற்கு சமமானவைகள் | 27,500 |
| d) இதர நடப்புச் சொத்துக்கள் | |
| செலவுகள் முன்கூட்டிச் செலுத்தியது | 2,500 |
| மொத்தம் | 10,00,000 |

43. a) கீழ்க்காணும் தகவல்களிலிருந்து கடலூர் கபடி மன்றத்தின் 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கைத் தயார் செய்யவும்.

| விவரம் | ரூ. | விவரம் | ரூ. |
|---|---|---|---|
| ரொக்க இருப்பு (1.4.2018) | 11,000 | வட்டி மற்றும் வங்கிக் கட்டணம் | 250 |
| வங்கிமேல்வரைப்பற்று இருப்பு (1.4.2018) | 20,000 | இதர வருமானம் | 350 |
| எழுதுபொருள் வாங்கியது | 5,200 | மைதானம் பராமரிப்பு | 550 |
| பயணச் செலவுகள் | 1,800 | அரசிடமிருந்து பெற்ற மானியம் | 12,000 |
| பங்காதாயம் பெற்றது | 3,000 | தொலைபேசிக் கட்டணம் செலுத்தியது | 2,800 |
| பொதுச் செலவுகள் | 500 | அறக்கட்டளை நிதி பெற்றது | 10,000 |
| சேர்க்கைக் கட்டணம் | 4,000 | காப்பீட்டு முனைமம் செலுத்தியது | 2,000 |
| தூது அஞ்சல் செலவுகள் | 2,000 | மின்கட்டணம் செலுத்தியது | 5,000 |
| நகராட்சி வரி செலுத்தியது | 3,000 | ரொக் கஇருப்பு (31.3.2019) | 1,750 |

*(அல்லது)*

b) சாய் மற்றும் சங்கர் இருவரும் கூட்டாளிகள். அவர்கள் தங்கள் இலாபம் மற்றும் நட்டங்களை 5:3 என்ற விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். அந்நிறுவனத்தின் 2017 டிசம்பர் 31- ஆம் நாளைய இருப்பு நிலைக்குறிப்பு பின்வருமாறு இருந்தது.

| பொறுப்புகள் | ரூ. | ரூ. | சொத்துக்கள் | ரூ. | ரூ. |
|---|---|---|---|---|---|
| முதல் கணக்குகள்: | | | கட்டடம் | | 34,000 |
| சாய் | 48,000 | | அறைகலன் | | 6,000 |
| சங்கர் | 40,000 | 88,000 | முதலீடுகள் | | 20,000 |
| கடனீந்தோர் | | 37,000 | கடனாளிகள் | 40,000 | |
| கொடுபட வேண்டிய கூலி | | 8,000 | கழிக்க : வாராக்கடன் ஒதுக்கு | 3,000 | 37,000 |
| | | | பெறுதற்குரிய மா.சீட்டு | | 12,000 |
| | | | சரக்கிருப்பு | | 16,000 |
| | | | வங்கி | | 8,000 |
| | | 1,33,000 | | | 1,33,000 |

2017, டிசம்பர் 31-இல் சண்முகம் என்பவர் $^1/_4$ இலாபப் பகிர்வு விகிதத்தில் கூட்டாண்மையில் சேருகிறார். அவர் பின்வரும் சரிக்கட்டுதலுக்கு உட்பட்டு ரூ.12,000 முதலாகக் கொண்டு வருகிறார்

a) அறைகலன் ரூ.5,000 மற்றும் கட்டடம் ரூ.50,000 ஆகவும் மறுமதிப்பீடு செய்யப்பட வேண்டும்.
b) வாரா ஐயக்கடன் ஒதுக்கு ரூ.5,500 ஆக உயர்த்த வேண்டும்.
c) பதிவுறாத ரூ.6,000 மதிப்புள்ள முதலீடு கணக்கில் கொண்டு வரப்பட வேண்டும்.
d) பதிவுறாத ரூ.2,500 மதிப்புள்ள பொறுப்பு பதிவு செய்யப்பட வேண்டும்.

மறுமதிப்பீட்டுக் கணக்கு மற்றும் கூட்டாளி சேர்க்கைக்குப் பின் உள்ள முதல் கணக்குகளையும் தயார் செய்யவும்.

44. a) நிலை முதல் முறைக்கும் மாறுபடும் முதல் முறைக்கும் இடையேயான வேறுபாடுகளை எழுதுக.

*(அல்லது)*

b) நண்பர்கள் கால்பந்து மன்றத்தின் 31.3.2017 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பின்வரும் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிலிருந்து 31.3.2017 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கு மற்றும் அந்நாளைய இருப்புநிலைக்குறிப்பு தயாரிக்கவும்.

நண்பர்கள் கால்பந்து மன்றத்தின் ஏடுகளில் 2017, மார்ச் 31 - ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு

| பெறுதல்கள் | ரூ. | ரூ. | செலுத்தல்கள் | ரூ. | ரூ. |
|---|---|---|---|---|---|
| இருப்பு கீ/கொ | | | அறைகலன் | | 7,000 |
| ரொக்கம் | 1,000 | | விளையாட்டு பொருட்கள் | | |
| வங்கி | 10,000 | 11,000 | வாங்கியது | | 800 |
| சந்தா | | 5,000 | சிறப்பு விருந்துக்கான செலவுகள் | | 1,500 |
| உயில் கொடை | | 6,000 | மின் கட்டணம் | | 900 |
| சிறப்பு விருந்து | | | இருப்பு கீ/இ | | |
| கட்டண வசூல் | | 2,000 | கை ரொக்கம் | 1,800 | |
| | | | வங்கி ரொக்கம் | 12,000 | 13,800 |
| | | 24,000 | | | 24,000 |

கூடுதல் தகவல்கள்:

i) 2016, ஏப்ரல் 1 அன்று மன்றத்தில் இருந்த அறைகலன் ரூ.12,000 அறைகலன் மீதான தேய்மானம் கணக்கில் கொள்ள வேண்டியதில்லை.
ii) 2016 - 2017 ல் பெற வேண்டிய சந்தா ரூ.600
iii) 31.3.2017 அன்று விளையாட்டுப் பொருள்கள் இருப்பு ரூ.100
iv) 2016 ஏப்ரல் 1 அன்றைய முதல் நிதி ரூ.23,000

45. a) பின்வரும் விவரங்களிலிருந்து உயர் இலாபத்தில் 5 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.
   i) பயன்படுத்தப்பட்ட முதல் ரூ.1,20,000 ii) சாதாரண இலாப விகிதம் : 20%
   iii) 5 ஆண்டுகளுக்குரிய நிகர இலாபம்
   2014 : ரூ.30,000 ; 2015 : ரூ.32,000 ; 2016 : ரூ.35,000 ;
   2017 : ரூ.37,000 மற்றும் 2018 : ரூ.40,000
   iv) கூட்டாளிகளுக்கான உழைப்பூதியம் ஆண்டுக்கு ரூ.2,800 *(அல்லது)*

b) ஸ்ரீராம் மற்றும் ராஜ் எனும் கூட்டாளிகள் முறையே 2:1 எனும் விகிதத்தில் இலாப நட்டங்களைப் பகிர்ந்து வந்தனர். 1.4.2017 அன்று நெல்சன் என்பவரை புதிய கூட்டாளியாகச் சேர்த்தனர். கீழ்க்கண்ட சரிக்கட்டுதல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
   i) சரக்கிருப்பு மதிப்பை ரூ.5,000 உயர்த்த வேண்டும்.
   ii) ஏடுகளில் பதிவு பெறாமலுள்ள முதலீடுகள் ரூ.7,000 தற்போது பதிவு செய்தல் வேண்டும்.
   iii) அலுவலக சாதனங்கள் மதிப்பை ரூ.10,000 குறைக்க வேண்டும்.
   iv) கொடுபடாமலுள்ள கூலி ரூ.9,500 க்கு வகை செய்ய வேண்டும்.
   குறிப்பேட்டுப் பதிவுகள் தந்து மறுமதிப்பீட்டுக் கணக்கு தயாரிக்கவும்.

46. a) ஜெனிபர் நிறுமம் பங்கொன்று ரூ.10 முகமதிப்புள்ள 10,000 பங்குகளை வெளியிட்டது. பங்கொன்றுக்கு விண்ணப்பத்தின் மீது ரூ.3, ஒதுக்கீட்டின் போது ரூ.3, முதல் மற்றும் இறுதி அழைப்பின் மீது ரூ.4 செலுத்த வேண்டி இருந்தது. சுப்பு என்பவர் 100 பங்குகளுக்கான முதல் மற்றும் இறுதி அழைப்பினைக் கட்ட தவறினார். எஞ்சிய தொகைகள் அனைத்தும் பெறப்பட்டன. சுப்புவின் பங்குகள் ஒறுப்பிழப்பு செய்யப்பட்டன மற்றும் அவைகள் ஹேமா என்பவருக்கு பங்கு ஒன்று ரூ.7 வீதம் மறுவெளியீடு செய்யப்பட்டன.
   மேற்கண்ட நடவடிக்கைகளுக்கு குறிப்பேட்டுப் பதிவுகள் தரவும். *(அல்லது)*

b) கணினிமயக் கணக்கியல் முறையின் பயன்பாடுகளில் ஏதேனும் ஐந்தினை விளக்கவும்.

47. a) பின்வருவனவற்றிற்கு குறிப்பேட்டுப் பதிவுகள் தருக.
   i) மொத்தத் தொகையில் ரொக்கத்திற்கு பங்குகளை வெளியீடு செய்தல்
   ii) ரொக்கத்திற்கு அல்லாத மறுபயனுக்காக பங்குகளை வெளியிடுதல்.

*(அல்லது)*

b) யாஸ்மின் மற்றும் சக்தி நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து பொது அளவு நிதிநிலை அறிக்கையினைத் தயார் செய்யவும்.

| விவரம் | யாஸ்மின் நிறுமம் ரூ. | சக்தி நிறுமம் ரூ. |
|---|---|---|
| I. பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள்: | | |
| 1. பங்குதாரர் நிதி: | | |
| a) பங்கு முதல் | 2,00,000 | 3,00,000 |
| b) காப்பும் மிகுதியும் | 50,000 | 60,000 |
| 2. நீண்ட காலப் பொறுப்புகள்: | | |
| நீண்ட காலக் கடன்கள் | 1,50,000 | 1,80,000 |
| 3. நடப்புப் பொறுப்புகள்: | | |
| கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகள் | 1,00,000 | 60,000 |
| மொத்தம் | 5,00,000 | 6,00,000 |
| II. சொத்துக்கள்: | | |
| 1. நீண்ட காலச் சொத்துக்கள்: | | |
| a) நிலைச் சொத்துக்கள் | 2,00,000 | 3,00,000 |
| b) நீண்ட கால முதலீடுகள் | 50,000 | 1,20,000 |
| 2. நடப்புச் சொத்துக்கள்: | | |
| சரக்கிருப்பு | 2,00,000 | 90,000 |
| ரொக்கம் மற்றும் ரொக்கத்திற்கு சமமானவைகள் | 50,000 | 90,000 |
| மொத்தம் | 5,00,000 | 6,00,000 |

******